**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.59/2025**

**வாக்குமூலம்: வா.சா.1 – திருமதி.சந்திரா**

**27.07.2026 : சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

**1.** நான் தாக்கல் செய்த வழக்குரையில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் பிச்சையப்ப செட்டியார் சொன்னதன் பேரில் தயார் செய்யப்பட்டது. என் பெயரில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்த வருடம் எனத கணவர் இறந்தார் என்றால் சுமார் 14 வருடங்களுக்கு முன்பு காலமாகிவிட்டார். தேதி, மாதம் தெரியுமா என்றால் தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் எனது கணவர் இறப்பதற்கு முன்பே சொத்து வரி செலுத்தி வந்ததாக குறிப்பிட்டுள்ளேன், முதலில் எந்த வருடத்தில் வரி செலுத்தினேன் என்று சொல்ல முடியுமா என்றால் இல்லை. எனது கணவர் இறந்த பின்னர் ஆயக்குடி பஞ்சாயத்தில் சொத்து வரி என் பெயரில் மாற்றம் செய்வதற்காக எந்த நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். மின் கட்டணம் செலுத்துவதற்கும் எனது பெயரில் பெயர் மாற்றம் செய்வதற்கு ஏதாவது நடவடிக்கையும் எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். மேற்படி நடவடிக்கை எடுத்ததற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது பெயரிலோ, அல்லது எனது மக்கள் பெயரிலோ நில வரி செலுத்துவதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் வாய்க்கரால் கிரையம் பெற்றதாக சொல்லப்பட்ட பிறகு எனது கணவர் பெயரிலோ, எனது பெயரிலோ எங்களது மக்கள் பெயரிலோ பட்டாவில் பெயர் மாற்றம் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். இது வரை நாங்கள் செலுத்தி வரும் வரிகள் அனைத்தும் எனது கணவர் பெயரிலோ, எனது பெயரிலோ எங்களது மக்கள் பெயரிலோ பட்டாவில் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். பிச்சையப்ப செட்டியாரை எனக்கு தெரியுமா என்றால் சுமார் 10 வருடங்களாக தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆதார் அட்டையில் உள்ள புகைப்படத்தில் இருப்பது பிச்சையப்ப செட்டியார் என்றால் சரிதான். பெரியண்ணன் செட்டியாரை தெரியுமா என்றாலும், அவருக்கு பழனிப்ப செட்டியாரும், ராசு செட்டியார் என்ற ஆறுமுக செட்டியார் ஆகிய 2 மகன்கள் உள்ளார்கள் என்று தெரியுமா என்றாலும் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் வழக்குச் சொத்தில் இடைஞ்சல் செய்து வருகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் அதற்கு பிரதிவாதிகள் மீது புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. பெரியண்ணன் செட்டியார் வழக்குச் சொத்தை அளப்பதற்காகவும் அளந்து எல்லைகல் வைப்பதற்காகவும் தாசில்தார் அலுவலகத்தில் மனு செய்து வருவாய் துறையினர் வழக்குச் சொத்தை வந்து அளந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவரின் தாயார் பெயர் மீனாட்சி ஆகும்.

2. என்னை குறுக்கு விசாரணை செய்த போது மாமியார் மீனாட்சி தான் வழக்குச் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்று சொல்லியுள்ளேன் ஆனால் எனது பிராதில் எனது மாமியார் மீனாட்சி தான் வழக்குச் சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.19 ல் முதல் தகவல் அறிக்கையானது நான் வழக்குச் சொத்தை அபகரித்ததால் எனது மகனால் பிரதிவாதிகள் மீது பொய்யான புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 24.03.2013 ஆம் தேதி பிரதிவாதிகள் வழக்குச் சொத்தில் அத்துமீறி நுழைய முயற்சித்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் அதற்கு மேற்படி தேதியில் பிரதிவாதிகள் மீது புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி பிரதிவாதிகள் அத்துமீறினார்கள் என்று சொல்லப்பட்டது இவ்வழக்கிற்காக வழக்கு மூலம் ஏற்படுத்துவதற்காகவே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு பிரதிவாதிகள் அத்துமீறினார்கள் என்பதற்கு ஆதரவாக எந்த சாட்சியங்களோ, ஆவணங்களோ இல்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியாது. நான் நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார்கள் என்றும் அதை பெரியமனிதர்களை வைத்து தடுத்து விட்டோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் பெரியமனிதர்கள் யார் என்று சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. தாவா சொத்து எனக்கு எந்த உரிமை ஆவணங்கள் அடிப்படையிலோ, உடைமை அடிப்படையிலோ பாத்தியம் இல்லை என்றாலும் வழக்குச் சொத்தில் நான் ஆக்கிரமிப்பாளர் என்ற முறையில் தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிச்சையப்ப செட்டியாரின் வாரிசு யார் என்று தெரியுமா என்றால் தெரியாது.

3. வழக்குச் சொத்து பிச்சையப்ப செட்டியாருக்கு பாத்தியப்பட்டுள்ளது என்பதை நிரூபிக்க அவர்கள் உரிமை ஆவணங்களோ, வருவாய் ஆவணங்களோ இவ்வழக்கின் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆவணங்கள் இல்லை. நான் மேற்படி பிச்சையப்ப செட்டியார் பெயரில் உள்ள ஆவணங்களை பார்வையிடவில்லை என்றால் சரிதான். நான் நிரூபண வாக்குமூலத்தில் எனது கணவர் ரூ.30,000/- கொடுத்து கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் அது எந்த ஆண்டு, மாதம், தேதி வாங்கப்பட்டது என்றால் அதுப் பற்றி தெரியாது. மேற்படி எனது கணவர் கிரையம் வாங்கும் போது நான் உடன் இருந்தேனா என்றால் உடன்இருந்தேன். எந்த ஊரில் வைத்து கிரையம் வாங்கப்பட்டது என்றால் ஆயக்குடியில் வைத்து கிரையம் வாங்கப்பட்டது. எனது திருமணம் ஆகி சுமார் எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் 60 வருடங்கள் ஆகும். எனது மாமியார் இறந்து எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 20 வருடங்கள் இருக்கும். எனது மாமியார் எங்கு குடியிருந்து வந்தார் என்றால் வேறு பக்கம் குடியிருந்து வந்தார். நானும் மாமியாருடன் தான் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். எங்கு குடியிருந்து வந்தோம் என்றால் ஆயக்குடியில் பெருமாள் கோவில் அருகில் குடியிருந்து வந்தோம். பிராதில் 4 வது பத்தியில் 6 வது வரியில் எனது கணவரிடம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் பிச்சையப்ப செட்டியார் ரூ.30,000/- ரொக்கம் பெற்றுக் கொண்டு பிராது சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்தாக

சொல்லியுள்ளேன், ஆனால் எனது குறுக்கு விசாரணையில் எனது மாமியார் மீனாட்யிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் எனது மாமியாரிடமிருந்து தான் கிரையம் பெற்றோம். எனக்கு எத்தனை வயதாகிறது என்றால் 56 வயதாகிறது. எனது நிரூபண வாக்குமூலத்திலும், பிராதிலும் 70 வயது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. நான்சொல்வது போல் எனது மாமியார் பெயரிலும், எனது கணவர் பெயரிலும் எந்த கிரையமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எந்த விபரமும் நேரடியாக தெரியாது என்றாலும் அதனால் தான் வழக்கிற்காக எனது வயதையும் மாற்றி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது மகனுக்கு திருமணம் ஆகிவிட்டது. அவருக்கு சுமார் 45 வயது இருக்கும். பிச்சையப்ப செட்டியார் என்ற நபர் ஒருவர் கிடையாது என்றாலும், இவ்வழக்கிற்காக பிச்சையப்ப செட்டியார் ஒருவர் இருந்ததாக பொய்யாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் பெரியண்ணன் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவரது இரண்டு மகன்களால் பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. ராசுசெட்டியார் என்ற ஆறுமுகச்செட்டியாருக்கு வாரிசாக குழந்தைவேல் மற்றும் பாரதி என்ற இரண்டு மக்கள் உள்ளனர் என்றும், பழனியப்ப செட்டியாருக்கு பெரியண்ணன் என்ற மகன்கள் உண்டு என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்பட்ட ஆதார் அட்டையில் இருப்பது பிச்சையப்பசெட்டியார் இல்லை என்றாலும், அது பழனியப்ப செட்டியாரின் மகன் பெரியண்ணன் செட்டியாரும் புகைப்படம் என்றாலும் சரியல்ல. ராசுசெட்டியார் என்ற ஆறுமுகச்செட்டியார் அவர்களுடைய பாகத்தை தான் பிரதிவாதிகள் கிரையம் செய்து குடியிருந்து வருகிறார்கள் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. நான் குடியிருக்கும் வீடும், பிரதிவாதிகள் குடியிருக்கும் வீடும் ஒரே சர்வே எண்ணில் உள்ளதா அல்லது தனித்தனி சர்வே எண்ணில் உள்ளதா என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. பிரதிவாதிகள் எனக்கு வடக்கு பக்கம் குடியிருக்கிறார்கள். அதற்கும் வடக்கு தெரு உள்ளது என்றால் சரிதான். கிழக்குப் பக்கம் கணேசன் வீடும், முருகன் வீடும் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் சுமார் 50 வருடங்களாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. தெற்குப் பக்கம் பெருமாள் கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்குப் பக்கத்தில் உங்கள் பகுதியில் சுவர் இல்லை என்றால் இல்லை. பிரதிவாதிகள் 1990 ஆண்டு முதலே அங்கு தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணம் தாசில்தாரிடமிருந்து பெறவில்லை என்றாலும், கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து தான் பெற்றப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பழனியப்பச் செட்டியார் மகன் பிச்சையப்ப செட்டியார் என்று பொய்யாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், மேற்படி ஆவணத்தை கிராம நிர்வாக அலுவலர் கொடுக்க அவருக்கு அதிகாரம் இல்லை என்றாலும், வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.4 ஆவணத்தில் ராமு என்ற பெயரை திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.5 ஆவணத்தில் வரி செலுத்துபவர்

பெயர் ராமு என்று தான் வரி விதிக்கப்பட்டவர் பெயரில் பழனிப்ப செட்டியார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் வரி விதிக்கப்பட்டவர் பெயர் பழனியப்ப செட்டியார் என்றும், வரி செலுத்தப்பட்டவர் பெயர் மாசிலாமணி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**(சாட்சி, சாட்சியம் அளிக்க முடியாமல் மயக்கம் அடைந்த நிலையில் வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை ஏதும் இல்லாததால் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது** .)

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledge by him/her to be correct

APOORVA S Digitally signed by APOORVA S Date: 2026.07.27 18:55:56 +0530

District Munsif,
Palani.